# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முன்றாம் வருட முதலாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு

## (2013/2014) January-February, 2018

## EDS 3133 முகாமைத்துவ கோட்பாடுகளும் செயன்முறையும்

## (Management Theories and Practice)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு (02) வினாக்களையும், பகுதி II இல் இருந்து ஏதாவது மூன்று (03) வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

## பகுதி I

1. அ. "அருமையான வளத்தினைப் பயன்படுத்தி நிறுவனத்தின் இலக்கினை அடைய முற்படும் கருமம் முகாமைத்துவம் எனப்படும்." பீற்றர்சனும் பிளவ்மனும் முகாமைத்துவம் என்பதற்கு குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை தருக. (03 புள்ளிகள்)

   ஆ. நிறுவனத்தின் அபிவிருத்திக்கு முகாமையாளரிடம் காணப்பட வேண்டிய முகாமைத்துவ பண்புகளை இனங்காண்க. (05 புள்ளிகள்)

   இ. தற்காலத்தில் பாடசாலை அதிபரிடம் காணப்பட வேண்டிய முகாமைத்துவ திறன்களை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

2. அ. "நிறுவனத்தின் வகுத்துரைக்கப்பட்ட நோக்கங்களை அல்லது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளின் ஒழுங்கு முறைகள் திட்டமிடல் எனப்படும்." பாடசாலைத் திட்டமிடலின்போது முக்கியம்பெறும் நான்கு (04) விடயங்களை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   ஆ. பாடசாலையின் தலைவருக்கு தீர்மானம் எடுத்தலின் போது ஏற்படும் தடைகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   இ. மிகைக் கட்டுப்படுத்தல், குறைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றினால் ஏற்படும் விளைவுகளை பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

3. அ. ''பிறரை வழிநடத்தி அவர்கள் மூலம் கடமைகளை நிறைவேற்றி அதன் மூலம் நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்காக உழைப்பவர் முகாமையாளராவார்.'' முகாமையாளரை அதிகாரம், பொறுப்புகளுக்கேற்ப வகைப்படுத்தி சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

   ஆ. சிறந்த தலைமைத்துவத்தினை கொண்டுள்ள முகாமையாளரிடம் காணப்படும் வலுக்களை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

இ. தற்காலத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்கண்டு அதனை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

## பகுதி II

4. அ. மனிதன் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஆய்வினை நடத்திய முதல் மனிதன் பிரடரிக் டபிள்யு ரெயிலர் ஆவார். உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு ரெயிலரினால் (Frederic W Taylor) குறிப்பிடப்படும் ஐந்து படிமுறைகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

ஆ. ஹென்றி பயோலினால் (Henry Fayol) குறிப்பிடப்படும் பயன்தரு தன்மையுள்ள நிறுவனத்தின் பொது உண்மைகளை ஆராய்க. (09 புள்ளிகள்)

இ. பிரடெரிக் ஹேஸ்பேக்கினால் (Prederic Herzberg) முன்வைக்கப்படும் சுகாதாரக் காரணி, ஊக்குவிக்கும் காரணி என்பனவற்றை அதிபர் பாடசாலையில் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

5. அ. ''மனிதத் தேவைகளை படிமுறை வளர்ச்சிக் கிரமத்தில் அமைத்து ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படுமிடத்தே அடுத்த நிலைக்கு செல்லும் நிலை ஏற்படும் என ஆப்ரகாம் மாஸ்லோ குறிப்பிட்டுள்ளார்.'' மாஸ்லோவின் (Abraham Maslow) தேவைக்கொள்கைக்கு எதிர்ப்புகள் தோன்றியமைக்கான காரணங்களை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ. ஹென்றி மின்ஸ்பேக்கின் தீர்மானம் செய் நடிபங்கின் போது அதிபர் எதிர்நோக்கும் சவால்களை பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

இ. எல்ரன் மாயோ (Elton Mayo) ஹோத்தோன் ஆய்வினூடாக பெறப்பட்ட முடிவுகளை பாடசாலை முகாமைத்துவத்தில் பாடசாலையின் தலைவர் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

6. அ. குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவம் (MBO) தொடர்பாக பிற்றர் ட்றக்கரினால் வலியுறுத்தப்படும் முக்கிய நான்கு (04) கருத்துக்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ. குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவத்தை (MBO) நிறுவனத்தில் பிரயோகிப்பதனால் ஏற்படக் கூடிய நன்மைகளை உதாரணத்துடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

இ. பாடசாலை மட்ட முகாமைத்துவம் (SBM) ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணங்களை குறிப்பிட்டு அதை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களை பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

அ. பாடசாலையில் தகவல் தொகுதியொன்றை அமைப்பதற்கான படிமுறைகள்

ஆ. உலகப்போக்கிற்கு ஏற்ப பாடசாலை முகாமைத்துவத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள்

இ. பாடசாலையில் நல்லதொரு தொடர்பாடலுக்கு தேவையான பண்புகள்

ஈ. கல்வி அமைப்பின் இறுதி நிறுவனமாகிய பாடசாலையின் கட்டமைப்பு

(4 x 6 = 24 புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28, பகுதி II – 72)